අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
**OFFICE ON MISSING PERSONS**

---

**ஊடக வெளியீடு** **26 நவம்பர் 2020**

**காணாமற்போன ஆட்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் தகவல்களினடிப்படையிலான பட்டியல்**

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது (காஆஅ) காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவகலத்திற்குக் கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் தகவல்களினடிப்படையில் காணாமற்போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலொன்றை பிரசுரிக்கிறது. இப்பட்டியலானது கொழும்பிலுள்ள காஆஅ தலைமையகத்திலும் மற்றும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மாத்தறையிலுள்ள அதன் பிராந்திய அலுவலகங்களிலும் பார்வையிடக்கூடியதாக இருக்கும்.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம், மோதல்கள், அரசியல் அமைதிக்குலைவு மற்றும் குடியியல் குழப்பங்கள் காரணமாக காணாமற்போன ஆட்கள், யுத்தச்சூழலில் காணாமல் போன ஆயுத படையினர் ∴ பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள் காஆஅ அலுவலக பணிப்பாணையின் கீழ் வருகின்றனர். காஆஅவின் காணாமற்போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவர்களின் கதியையும் எங்குள்ளார் என்பதையும் தெளிவுபடுத்துவதற்கான பிரதான பணிப்பாணையானது குறிப்பிட்டதொரு காலப்பகுதி, சமூகம் அல்லது பிராந்தியத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ෟ)காஆஅ இற்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள் ෟෟ) மாவட்ட செயலகங்கள் மூலமாக பெற்று முன்னாள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு கஆஅ விற்கு அனுப்பிவைத்த முறைப்பாடுகள் மற்றும் ෟෟෟ) காஆஅ இன் வேண்டுகோளின் பேரில் ஆயுத படையினரால் வழங்கப்பட்ட யுத்தச்செயலால் காணாமல் போன படையினரின் பட்டியல் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன.

வெளியிடப்பட்டுள்ள பட்டியலானது, பாரியளவிலான முறைப்பாடுகள் பெறப்பட்டதும் விரைவில் வெளியிடப்படவுள்ளதுமான மட்டக்களப்பு மாவட்டம் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் வதியும்

காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான நபர்களால் வழங்கப்பட்ட தகவல்களை உள்ளடக்குகிறது.

இப்பட்டியலில் கீழ்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன ை) காணாமற்போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவரிற்கு காஆஅ ஆல் ஒதுக்கப்பட்ட உசாத்துணை இலக்கம் ைை) காணாமற்போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவரினது பெயர் ஆங்கிலத்தில் மற்றும் சிங்களம் அல்லது தமிழில் ைைை) காணாமற்போன அல்லது காணாமலாக்கப்பட்ட திகதி ைஎ) காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட நபர் கடைசியாக வசித்த மாவட்டம்.

யுத்தச்செயலால் காணாமல் போன ஆயுத படையினர் தொடர்பான பட்டியலில் கீழ்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன. ை) காணாமற்போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவரிற்கு காஆஅ ஆல் ஒதுக்கப்பட்ட உசாத்துணை இலக்கம் ைை) காணாமற்போனவரின் பெயர் ஆங்கிலத்தில் ைைை) நபர் காணாமற்போன திகதி ைஎ) முப்படையினரால் குறித்த நபருக்கு வழங்கப்பட்டிருந்த இலக்கம் எ) காணாமல்போனவரின் தரவரிசை எை) காணாமல் போனவர் காணாமல் போன இடம் எைை) இராணுவப்படையினராயின் காணாமல் போனவரின் படைவகுப்பு (றெஜிமன்ட்).

இப்பட்டியலைப் பிரசுரிப்பதானது காணாமற்போனவர்கள் அல்லது காணாமலாக்கப்பட்டவர்களினது தகவல்களைச் ஒன்றிணைக்கும் செய்முறையின் ஒரு பாகமாகும். குறித்த பட்டியலானது காஆஅ ன் பணிப்பாணைக்குள் உள்ளடங்கும் தகவல்களையும் காஆஅ ன் பணிப்பாணைக்குள் உள்ளடங்குமா என்பதை தீர்மானிப்பதற்கு மேலதிக தெளிவுபடுத்தல்களை வேண்டியிருக்கும் தகவல்களையும் உள்ளடக்குகிறது. தெளிவாக காஆஅ ன் பணிப்பாணைக்குள் உள்ளடங்காத விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன.

காஆஅ ஆனது 2020 பெப்ரவரி மாதம் அதன் தற்காலிக பட்டியலைச் சரிபார்க்கும் செய்முறையை ஆரம்பித்தது. இதன் பாகமாக காணாமல் போனோரின் குடும்பத்தினர் தம் அன்பிற்குரியவர்கள் பற்றிய தகவல்களைச் சரிபார்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டனர். அதேநேரம், காஆஅ ஆனது நகல் பதிவுகளைத் தவிர்ப்பதற்காகத் தமது உள்ளகச் செய்முறைச் சரிபார்ப்பிலும் ஈடுபட்டு வருகிறது. காஆஅ ஆனது காஆஅ இனது பணிப்பாணையின் கீழ் வராத விடயங்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய குடும்பங்களுக்கு அறிவித்து வருகின்றது. தகவல்கள் தெளிவற்றதாக அல்லது பற்றாக்குறையாகவுள்ள விடயங்கள் தொடர்பாக, காஆஅ ஆனது மேலதிகத் தகவல்களைக் கோரி வருகின்றது.

தற்போது பிரசுரிக்கப்படும் பட்டியலில் பதிவுசெய்யப்பட்ட தகவல்களை மீளாய்வு செய்து, ஏதேனும் கரிசனைகள் இருப்பின் காஆஅ விற்குத் தெரிவிப்பதற்கு குடும்பங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. பட்டியலில் சேர்க்கப்பட்ட காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு ஏதேனும் தகவல்கள் தெரிந்திருப்பின் அது பற்றி காஆஅ விற்கு அறிவிப்பதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர். காஆஅ விற்கு ஏற்கனவே முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தும் குறித்த பட்டியலில் அது தொடர்பான தகவல்கள் உள்ளடங்கவில்லை எனக் கருதும்

காணாமல் போனோரின் குடும்ப அங்கத்தவருக்கு காஆஅ தயவுடன் அறிவிப்பதாவது, இப்பட்டியல் தொடர்ந்தும் புதுப்பிக்கப்படும் என்பதாகும்.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான பல விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான ஒருங்கிணைந்த உத்தியோகபூர்வ பதிவு இன்றுவரை இலங்கையில் இல்லை. தொடர்புடைய சட்டத்தின் பிரிவு 10 (1) (உ) இன் கீழ், காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தரவுகளை ஒன்றிணைத்து மையப்படுத்த காஆஅ ஆணைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பணிப்பாணைக்கு உட்பட்ட காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் ஒருங்கிணைந்த பட்டியலை உருவாக்குதலானது, விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளை நடத்துவதற்கும், உள்ளகச் செயல்முறைகளை அபிவிருத்தி செய்வதற்கும், காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் குறித்து பரிந்துரைகளை வழங்க காஆஅ விற்கு உதவுகிறது.

காணாமலாக்கப்படுதலினால், குடும்பங்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஏற்படுத்தப்படும் அபரிதமான தாக்கத்தை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் உணர்வதோடு, தீர்வுகளை வழங்குவதற்கும் உண்மையை நிறுவுவதற்குமான தனது கடப்பாட்டில் உறுதியாகவுள்ளது. பிரசுரிக்கப்படும் இப்பட்டியலானது இலங்கையில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் உத்தியோகபூர்வமானதும் பொருத்தமானதுமான பதிவை நிறுவும் செயன்முறையில் ஒரு முக்கியமான படியாகும்.